புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியத்தில் தெய்வம் எனும் கருப்பொருள்

முனைவர் மு.கருப்பையா,
தமிழ்த்துறை,
அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருட்ணன்கோயில்.

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியர் கூறும் தெய்வம் எனும் கருப்பொருளையும் சங்க இலக்கியத்தில் உள்ள எட்டுத்தொகை நூல்களான ஐங்குறுநூறு,குறுந்தொகை, நற்றிணை,அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களிலும் உள்ள அகப்பாடல்களில் தெய்வம் பற்றிய செய்திகளைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை உள்ளது. தொல்காப்பியர் கூறும் நான்கு நிலத் தெய்வங்களுக்கும் சங்க இலக்கயத் திணைப்பாடல்களில் காட்டப்பெறும் தெய்வங்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர் குறிப்பிடும் முல்லைத்திணைக்குரிய மாயோனும் குறிஞ்சித்திணைக்குரிய சேயோனும் சங்க பாடல்களில் காட்டப்படுகின்றன ஆனால் மருதத்திணைக்குரிய வேந்தனும் நெய்தல் திணைக்குரிய வருணனும் காட்டப்பெறவில்லை. சங்க அகப்பாடல்கள் வெளிப்படுத்தும் தெய்வங்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் அறிய முடியும்.

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தமிழ் இலக்கிய இலக்கண மரபில் கிடைத்திருக்கும் நூல்கள் சங்க இலக்கியமும் தொல்காப்பியமுமாகும். இவற்றில் பழந்தமிழரின் வாழ்வியல் முறையினைக் காணமுடியும். இவ்விலக்கியங்களில் தொல்காப்பியர் குறிப்பிடும் நிலத் தெய்வங்களுக்கும் சங்க இலக்கிய திணைப்பாடல்கள் கூறும் திணைத் தெய்வங்களுக்கும் வேறுபடுகின்றச் சிக்கலை மையமாகக் கொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

## ஆய்வு அணுகுமுறை

சங்க நூல்களான எட்டுத்தொகை நூல்களில் ஐந்து அகநூல்களில் உள்ள அகத்திணை பாடல்களில் காட்டபெறும் தெய்வக் கருப்பொருள்களைப் தொகுத்தும் பகுத்தும் கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் அவற்றினை பற்றி விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையும் இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வுக் கருதுகோள்

தொல்காப்பியர் குறிப்பிடும் நான்கு வகை நிலத் தெய்வங்களுக்கும் சங்க இலக்கியமான ஐங்குறுநூறுஇகுறுந்தொகைஇ நற்றிணைஇ அகநானூறுஇ கலித்தொகைஇ ஆகிய ஐந்து நூல்கள் வெளிப்படுத்தும் திணைத் தெய்வங்களுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன என்பது இக்கட்டுரையின் கருதுகோளாக அமைகின்றது.

## கரு – விளக்கம்

நிலம், காலத்தால் கருக்கொள்வது கருப்பொருளாகும். இது தானே கருக்கொள்வதும் கருக்கொள்ளத்துணை நிற்பதுமாக உள்ளது. உலகமாகியக் கருவுக்குள் உயிர்த்தெழுவதெல்லாம் கருப்பொருளாகும். இக்கருப்பொருள் கால எல்லைக்குள் முயங்கி இயங்குவதும்(கலவி) இயங்கி முயங்வதுமாக உள்ள கலவியை உணர முடிகின்றது. இதை நன்கு உணர்ந்த தொல்காப்பியர்,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரும் மேவற் றாகும்.[1]

என்பார். இவ்வாறு தோற்றம் பெறும் கருப்பொருகளை வகைப்படுத்தும்போது,

தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப.[2]

என்பார் தொல்காப்பியர். இக்கருப்பொருள்களின் கலவியல் உணர்வைக் கொண்டு மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் மரபாகக்கொண்டு காதல் கவிதைகள் இயற்றினர் புலவர். ‘அவ்வகை பிறவும் கருவென மொழிப’ எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டதனால் பின் வந்த இலக்கணவாதிகள் பதினான்கு வகையாகப் பகுத்துக்கொண்டனர்.

தெய்வம் செல்வர் சேர்குடி புள்விலங்கு
பூநீர் ஊர் மரம் உணாப்பறை யாழ்பண்
தொழில்எனக் கருஈர் எழுவகைத தாகும்.[3]

ஏனத் தொன்னூல்,முத்துவீரியம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பதிநான்கு வகை கருப்பொருள்களும் காதல் உணர்வால் தோற்றம் பெற்று பல்வேறு வடிவங்களையும் இல்லது உருவங்களையும் பெற்றுள்ளன. இககாதல் உணர்வை உயிரற்ற கருப்பொருள்வழி உணர முடியவில்லை என்றாலும் உயிருள்ள கருப்பொருள் வழி உணர முடிகின்றது. இதை நன்கு கண்டுணர்ந்த வள்ளுவர்,

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.[4]

என்பார்.

கருப்பொருள் ஒரு குறிப்பிட்ட காலங்களை அதாவது ஞாயிற்றின் ஒளியை நாளங்களில் பெற்று சிறிது சிறிதாக உயர்ந்து உச்சநிலையை அமைந்து பூத்து தவறாமல் ஈனும் வித்தை உருவாக்கிவிடுகிறது. இவ்வாறு உருவாக்கவே நிலம்இகருப்பொருளைத் தாங்கி இருபத்து மூன்றரை டிகிரி சாய்ந்து இயங்குகிறது. இவ்வாறான முதன்மையானப் பணியை நிலமும் காலமும் செய்வதை உணர்ந்த தொல்காப்பியர் நிலத்தையும் பொழுதையும் முதற்பொருள் என்றார்.

முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்.[5]

இவ்வாறு நிலச்சுழற்சியும் கால வளர்ச்சியும் சேர்ந்த காதல் உணர்ச்சியே கருப்பொருளாகி உருப்பொருள்களாக உருவாகின்றன.இவ்வாறு உருவான கருப்பொருள்கள் நிலத்தன்மைக்கும் காலத்தன்மைக்கும் ஏற்ற வண்ணங்களையும் வடிவங்களையும் பெற்றுத்திகழ்கின்றன. இதனை “கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோற்றும் பொருள்.அது தேவர் மக்கள் விலங்கு முதலாயினவும் இஉணவு செயல் முதலாயினவும் பறையாழ் முதலாயினவும்இ இன்னவென பிறவும் ஆகிப் பலவகைப்படும்.”[6] என்பார் இளம்பூரணா.

இக்கருப்பொருள் நிலத்தன்மைக்கு ஏற்ப அமையும் என்பதை பெ.மாதையன் குறிப்பிடும்பொழுது “உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் இந்தக் கருப்பொருள்கள் ஒவ்வொரு திணையும் தன்னளவில் தனித்ன்மையுடையனவாக இருந்ததையும் பிறதிணைகளில் இல்லாதவற்றை உடையனவாக இருத்தலையும் வெளிப்படுத்துகின்றன இவை அந்தந்த நிலத்தின் இயல்பை அடிப்படையாகக் கொணடவை.”[7] என்பார்.

பொருள் – விளக்கம்

முதல் கரு உரி என்ற மூன்று மட்டுமே பொருள் என்பர். இதை “பொருள் என்பது யாதோ எனின்இ மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப்பட்டவை அது முதல்இ கருஇ உரிப்பொருள் என மூவகைப்படும்”.(தொல்.அகத்.இளம்பூரணர் உரைஇப.15) என்பார் இளம்பூரணர். உலகில் இம்மூன்றாலேயே வடிவம் பெற்றவைகளைப் பொருள் என்ற குறிப்பிடப்படுகின்றன. எல்லாச் சொற்களும் இம்மூன்றினுக்குள் அடங்கும் அதனாலேயே “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”[8] எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவதை அறியலாம். இவ்வாறு தோற்றம் பெற்றுள்ளக் கருப்பொருள்களில் தெய்வம் பற்றிப் பின் வருமாறு காண்போம்.

தெய்வம் எனும் கருப்பொருள்

தெய்வம் எனும் சொல் இறைவன் கடவுள்இ ஆண்டவன் தேவன்இ ஊழ் என ஒருபொருள் குறித்த பல சொல் கிளவியாக உள்ளது. இவை பல்வேறு இறை வடிவங்களைக் குறிப்பிடும் பொதுச்சொற்களாக உள்ளன. தெய்வம் எனும் சொல் தொல்காப்பியத்தில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியர் கருப்பொருள் பற்றிக் குறிப்பிடும்பொழுது தெய்வம் எனும் சொல்லை முதன்மைப்படுத்திக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. அகத்திணை என்பது மாந்தனுக்குச் சொல்லப்பட்ட காதல் இலக்கண மரபாக உள்ளது. தொல்காப்பியர் கருப்பொருள் பற்றிக் குறிப்பிடும் பொழுது மக்களை ஒரு கருப்பொருளாகச் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பின் வந்த இலக்கணவாதிகள் மக்களைக் கருப்பொருளாகச் சேர்த்துள்ளனர். தொல்காப்பியர் தெய்வம் வேறு மக்கள் வேறாக அவர் பார்க்கவில்லை அவர் மக்களின் காதல் உணர்ச்சியையே தெய்வக்குறிடாக்குகிறார்.ஆண் பெண் சந்திக்கின்றச் சந்திப்பை இயற்கைப்புணர்ச்சி அதாவது தெய்வப்புணர்ச்சி என்கிறார். இப்புணர்ச்சியையே தொல்காப்பியர் கடவுள் என்கிறார். “காமப் பகுதியும் கடவுளும் வரையார்” (தொல்.நூ.1029) காமமாகிய காதல் உணர்ச்சிவேறு கடவுள் உணர்ச்சி வேறு அல்;ல இரண்டும் ஒன்றேயாகும். அதனால்தான் இன்றைக்கும் இலிங்க வழிபாடும் அதன் பின்னணியேயாகும் என்பர். ஆண் பெண் இருவரையும் சந்திக்கச் செய்வது காமமாகிய காதல் உணர்ச்சியே இக்காதலின் பாலுணர்ச்சியே இருவரையும் சந்திக்கச் செய்கிறது இதை நன்கு உணர்ந்த தொல்காப்பியர்இ

ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப.[9]

என்பார். இவ்வாறு சந்தித்து காதல் கொண்டு இத்தெய்வீக வாழ்வை ஒருவருக்கொருவர் இணங்கி அதாவது வணங்கி வாழ வேண்டும் என்பதைே வள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.[10]

கருதிய பொழுது வள்ளுவர் இக்குறளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆண் சிந்திக்கும் திறனையும் பெண் சந்திக்கும் திறனையும் பெற்றவர்களாகவே உள்ளனர். ஏனென்றால் ஆண் வினைமேல் உயிராக இருந்தாலும் தலைவியின் சிந்தனையே மேல் எழுகிறது. தலைவி மனையுறை மகளிராக இருந்;தாலும் தலைவனை சந்திக்க வேண்டும் பேச வேண்டும் என ஆவலாகவே உள்ளாள் இவையே சங்க இலக்கியப் பாடல்களின் பின்னணியாக உள்ளன.

இவ்வாறு வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள காதல் உணர்ச்சியை வகைப்படுத்தி கூற வந்த தொல்காப்பியர்,

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.[11]

எனக் குறிப்பிடுகிறார்.இவ்வுணர்ச்சிகள் நிலச்சூழலுக்கும் காலச்சூழலுக்கும் ஏற்பத் தோற்றம் பெறும் என்பதன் பின்னணியாகவே,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமாணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.[12]

எனக் குறிப்பிட்டு தெய்வீக உணர்ச்சி வடிவமாக்கிறார் தொல்காப்பியர்.

இந்நான்கும் ஞாயிறை ஆதவன், சூரியன், தினகரன், காலன் என ஆண் விகுதிமேல் வைத்து குறிப்பிடுவதன் நோக்கம் ஞாயிற்றின் ஒளிப்பிளம்பாலயே கருப்பொருளால் நான்கு நிலமும் வெவ்வேறு சிறப்புகள் பெறுகின்றன. பெண் மண்ணிற்கு அதாவது பூமிக்கு பூமாதேவி என ஒப்பிடப்படுகிறாள். இவை இரண்டாலேயே கருப்பொருள் உருவாகிறது. பூமியாகிய மண் இல்லாமல் செடியோ மரமோ மலராது சூரிய ஒளி இல்லாமல் அவை வளராது. இவை இரண்டும் சேர்ந்ததே நான்கு இயற்கைப் பகுதியாகும். இதை “இயற்கையன்னை கோயில் கொள்ளும் இடம்

- மலைநாடன் குறிஞ்சி அவள் தனது அருளழகை விளக்குமிடம் - முல்லை கொலு வீற்றிருக்கும் திருவோலகம் - மருதம் அவள் மகிழ்ந்து விளையாடி மாண்புறும் இடம் - நெய்தல்"[13] என ஔவை சு.துரைசாமிபிள்ளை குறிப்பிடுவதனால் அறியலாம். கருப்பொருள் எல்லாம் மண்ணாகிய பெண்ணே தாங்கிநிற்பதால் இயற்கை அன்னை எனக் குறிப்பிடுவதை அறிமுடிகிறது.

ஐவகை நிலங்களுக்கான தெய்வங்களாகக் குறிப்பிடும் தொல்காப்பியர்இ மயோன் மேய காடுறை உலகமும் என்பதால் காடுலகமாக இருக்கக் கூடிய இயற்கைச் சூழலும் சேயோன் மேய மைவரை உலகமும் என்பதால் மலையுலகமாகிய இயற்கைச் சூழலும் வேந்தன் மேய தீம்புனல் உலகமும் என்பதால் நீரநிரைந்த வயல்சார்ந்த இயற்கை சூழலும் வருணன் மேய பெருமணல் உலகமும் என்பதால் மணல் சார்ந்த கடல் பகுதிகளான இயற்கைச் சூழலும் கருப்பொருளாகவே எண்ணப்பட்டு தெய்வக் கருப்பொருளாகவே கருதியுள்ளார் தொல்காப்பியர். "தெய்வம் உணவே மா மரம் புள் (தொல்.கூசாங)எனத் தெய்வமும் திணைக்கருப்பொருளாக எண்ணப்பட்டு வருதலின் தமிழர் தெய்வங்கள் தமிழ் நிலத்தாய் ஈன்றவை என்று துணிதற்குச் சான்று வேறு வேண்டுமோ?."[14] என வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவதாலும் நிலச்சூழலே தெய்வமாக்கப்படுவதை அறியமுடிகின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின் வந்த பொருள் இலக்கண நூல்கள் வாசுதேவன்இ மாயன், நீடுமால், ஆரணங்கு, முராரி, கரும்ஆயன், மாயவன் எனப் பல்வேறு பெயர்களில் வழங்குகின்றன.ஆனால் சங்க அக இலக்கியங்களான ஐங்குறுநூற்றிலும் குறுந்தொகையிலும் உள்ள முல்லைப் பாடல்களில் தெய்வக் கருப்பொருள் பற்றிப் புலவர்கள் ஒரு பாடல் கூடப் பாடப்படவில்லை என்பது ஆய்வில் தெரியவருகிறது. நற்றிணையில் ஓர் இடத்தில் மட்டும் 'சூர்' என வந்துள்ளது. (நற்.பாடல் எண்இ 367) இதற்குத் தெய்வம்இதெய்வப்பெண் என்று பொருள். மாயோன்இதிருமார்பன்இ திகிரி(திருமால்) எனக் கலித்தொகை குறிப்பிடுவதை அறியமுடிகிறது. 'பல முல்லைக்கலிப் பாடல்கள் தெய்வ வணக்கமகவும் வாழ்த்தாகவும் முடிகின்றன என வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவது போல கலித்தொகையில் மிகுதியாகத் தெய்வக் கருப்பொருள் பாடப்பட்டுள்ளன.அகநானூற்றில் ஓரிடத்தில் மட்டும் தெய்வம் பற்றிப் பேசப்படுகிறது.

குறிஞ்சி நிலத் தெய்வமாக 'சேயோன்' என்று குழந்தையாய்க் காட்டுகிறார் தொல்காப்பியர். இறையனார் அகப்பொருள், களவியல் காரிகை போன்ற நூல்கள் முருகவேள் என்கின்றன. தமிழ்நெறி விளக்கம்இவீரசோழியம்இ முத்துவீரியம் போன்ற இலக்கண நூல்கள் 'முருகன்' என்றும் நம்பியகப்பொருள்இ இலக்கண விளக்கம் போன்றவை 'சேய்' என்றும் மாறனகப்பொருள் 'வேலன்' என்றும் நேமிநாதம் 'குகன்' என்றும் குறிப்பிடுகின்றன. எல்லா இலக்கண நூல்களும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி ஆண் தெய்வங்களாகவே காட்டுகின்றன. மாறனகப்பொருள் மட்டும் 'சூரரமகளிர்' எனப் பெண் தெய்வத்தைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் காலந்தொட்டே குழந்தையாய், குமரனாய், அழகனாய் இலக்கண நூல்கள் காட்டுகின்றன. திருக்குருகைப்பெருமாள் கவிராயர் காலத்தில்தான் 'வேலன்' எனப் பெயர் இடம்பெறுகிறதை அறியமுடிகிறது.

எட்டுத்தொகையில் அகநூல்களில் ஐங்குறுநூறு வேலன், சிலம்பில் கடவுள், முருகன், முருகு, வேள், வரையற மகளிர், மலையறைகடவுள் எனக் குறிப்பிடுகிறது. சேஎய், சூர், பேஎம்முதிர்கடவுள், கடிவுண்கடவுள், நெடுவேள், அணங்கு, தெய்வம் எனக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. கடவுள் எனும் சொல் ஐங்குறுநூற்றிலும் தெய்வம் எனும் சொல் குந்தொதையிலும் இடம்பெற்றுள்ளதை அறியலாம். மூலதேவன், வள்ளி, பலிபெறுகடவுள், வானரமகளிர் என நற்றிணை குறிப்பிடுவதை அறியலாம். கொல்லிப்பாவை, சூரரமகளிர் என அகநானூறு சுட்டுகிறது.

ஐயனை ஏத்துவாம் போல. [15]

ஐயன் எனக் கலித்தொகை எடுத்துரைக்கிறது. முருகனுக்கு பலி கொடுத்து வழிபாடு செய்திருக்கிறார்கள். வள்ளியைப் பெண் தெய்வமாக ஏற்று வழிபட்டிருக்கிறார்கள் பண்டைய குறிஞ்சி நில மக்கள்.

மருதநிலக் கடவுளாக வேலன், அணங்கு, சேஎயோகு, கடவுள், தெய்வம், கொற்றி, செவ்வேலன் போன்ற பெயர்களை மருதத்திணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வங்களையே மருதமும் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் 'வேந்தன்' எனும் தெய்வம் அகநூல்களில் இடம்பெறவில்லை என்பதை உணரமுடிகின்றது. மருதநிலப் பெண்

தெய்வமாக கொற்றி எனும் கொற்றவை(காளி) மருதநில மக்கள் வழிபட்டிருக்கிறார்கள் என்பதைஇ

பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு[16]

எனக் கலித்தொகை வழி அறியலாம்.

நெய்தல் நிலத் தெய்வமாக வரையறமகளிர் என ஐங்குறுநூறும் சூருடை எனக் குறுந்தொதையும் பெருங்கடல் அணங்கோ, தொன்று உறைகடவுள், கணம்கெழு கடவுள், உருகெழு தெய்வம், நெடியோன், இரும்பெருந்தெய்வம் என அகநானூறும் நேமியான், சடைகரந்தான், ஆதிரையான் எனக் கலித்தொகையும் நெய்தல் நிலக் கடவுள்களாகக் குறிப்பிடுகின்றன. இந்நூல்களில் தொல்காப்பியம் குறிப்பிடும் 'வருணன்' எனும் தெய்வம் பற்றிக் காணமுடியவில்லை.

பாலை நிலத் தெய்வமாக முருகமர், அணங்கு, என ஐங்குறுநூறும் சூலி எகக் குறுந்தொகையும் தெறல்அறங்கடவுள் என நற்றிணையும் முருகன், நடுகல், சூர், மாஅல் என அகநானூறும் முக்கண்ணன், வணங்குஇறை வளிதரும் செல்வன், அறக்கடவுள், ஒருகுழைஒருவன், ஆனேற்றுக்கொடியோன், நாஞ்சிலான் எனக் கலித்தொகையும் குறிப்பிடுகின்றன. 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்துபாலைஎன்பதால் முல்லைஇ குறிஞ்சிக்குரிய தெய்வங்கள் குறிப்பிடப்பட்டிருத்தலைக் காணலாம்.

முடிவுரை

தொல்காப்பியம் குறிப்பிடும் முல்லைநிலத் தெய்வமான மாயோனும் குறிஞ்சிநிலத் கடவுளான சேயோனும் தவிர மற்ற மருதம்இ நெய்தல் நிலத் தெய்வங்களான இந்திரன்இ வருணன் பற்றிய குறிப்புகள் பற்றி அகநூல்கள் குறிப்பிடவில்லை என்பதை அறியமுடிகிறது. சங்ககாலப் புலவர்கள் இக்கடவுள்களைப் பற்றிப் பாடினார்களா? இல்லை பாடிய பாடல்கள் நமக்குக் கிடைக்கப்பெறவில்லையா? என்பது ஆய்வுக்குரியதாக உள்ளது. தொல்காப்பியர் நிலத் தெய்வங்கள் அனைத்தும் காதல் உணர்வைத் தருகின்ற இயற்கையின் கட்டமைப்பாகவே உள்ளன. மானிடக் காதல் உணர்வைத் இயக்குகின்ற இயற்கை உணர்வின் இயங்குதளமாக உள்ளதை அறியமுடிகின்றது.

ஆய்வு மேற்கோள்கள்


1. தொல்காப்பியம்.பொருளதிகாரம்,முல்லை நிலையம், 1997நூ, 1168.
2. தொல்காப்பியம்.அகத்திணையியல், முல்லைநிலையம், 1995.நூ.20.
3. தொன்.நூ.175.
4. டாக்டர், மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரைஇகழகவெளியீடுஇ2014, குறள், 361.
5. மேலது, அகத்.நூ.4.
6. தொல்காப்பியம்.பொருளதிகாரம், இளம்பூரணர் உரை முல்லை நிலையம், 1997.ப.2.
7. பெ.மாதையன், அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்,ப.33.
8. முனைவர் ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் சொல்லதிகாரம் கழகவெளியீடு 1997, நூ.640.
9. தொல்காப்பியம். பொருளதிகாரம், முல்லை நிலையம், 1997.நூ.1039.
10. டாக்டர் மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, கழகவெளியீடு, 2014, குறள்;55.
11. தொல்காப்பியம்.பொருளதிகாரம், முல்லை நிலையம், 1997, நூ.16.
12. மேலது, நூ.5.
13. ஔவை சு.துரைசாமிபிள்ளை, நந்தாவிளக்கு, ப.29.
14. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.169.
15. சங்க இலக்கியம் கலித்தொகை என்.சி.பி.எச்.2004, பாடல் எண்,43
16. மேலது, பாடல் எண், 89.


********* ********* ********** ********* ********* ********** ********** **********